2016 ஜனவரி 21]

தொடங்கவில்லை என்பதை ஆய்வு செய்து, ஆய்வின் அடிப்படையில் அந்த இடத்திலே விளையாட்டு மைதானத்தைத் தொடங்குவதற்கு வாய்ப்பில்லை என்றால், அதை மாற்றிக் கொடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இன்னும் பல்வேறு கோரிக்கைகளை நீங்கள் கூறியிருக்கிறீர்கள். அவை குறித்தும் நீங்கள் எழுதிக் கொடுத்தால், அவற்றைப் பரிசீலனை செய்து நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

14—

அரிய வகை மரங்களைப் பாதுகாத்தல்

***15287—திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, அழகர்கோவில் மலைப் பகுதியிலுள்ள அரிய வகை மரங்களைப் பாதுகாத்து, பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மேலூர் சட்டமன்றத் தொகுதி, அழகர்கோவில் பகுதியில் உள்ள காடுகள் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியாகும். மேலும், அப்பகுதிகளில் அரிய வகை மரங்கள் மற்றும் மருத்துவத் தாவரங்கள் ஆகியவை நல்ல முறையில் வனத் துறையால் பாதுகாக்கப்பட்டும், பராமரிக்கப்பட்டும் வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[2016 ஜனவரி 21

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.*

திரு. ஆர். சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, என்னுடைய கேள்வியைத் தொடங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், மேலூர் தொகுதியில் அமைந்துள்ள 'ஸ்ரீகள்ளழகர்' என்று சொல்லக்கூடிய அழகர்கோவில் மலை, மதுரை மாவட்டமும், திண்டுக்கல் மாவட்டமும் இணைந்தது. இரண்டு மலைகளும் ஏறத்தாழ 500 ஏக்கருக்கும் மேற்பட்ட மலைப் பகுதியாக இருந்து வருகிறது. மலை உச்சியின் நடுப் பகுதியிலே 6 கிலோ மீட்டர் தொலைவிற்கு ரோடு செல்கிறது. மேலே ராக்காயிஅம்மன் தீர்த்தம் ஆடக்கூடிய ஒரு தீர்த்தநிலை ஏற்கெனவே இருக்கின்றது. அதில், ஒரு புறம் திண்டுக்கல் மாவட்டத்திலும், மற்றொருபுறம் மேலூர், மதுரை மாவட்டத்திலும் அமைந்திருக்கிறது. பாரம்பரியமிக்க அந்த மலையின் நடுவில், 6 கிலோ மீட்டர் தூரத்திற்கு மக்கள் நடந்தும், கார்களிலும் செல்கின்றனர். அந்தப் பாதையில், 50, 60 ஆண்டுகளுக்கு முன்பு உருவாகியுள்ள பல அரிய வகை மரங்கள், பெரிய பெரிய மரங்களாக ஆயிரக்கணக்கில் இருக்கின்றன. ஆயிரக்கணக்கான பக்தர்கள் தினந்தோறும் செல்கின்றபோது, ஒவ்வொரு மரத்தையும் நின்று, நின்று பார்த்து, 'இவ்வளவு அழகாக இருக்கிறதே! ஒவ்வொரு மரமும் வித்தியாசமாக இருக்கிறதே' நின்று அவற்றைப் பார்த்துச் செல்கின்றார்கள். ஆகையால், நான் அன்போடு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், அங்கே ஆயிரக்கணக்கான அரிய வகை மரங்கள் இருக்கின்றன; பலவகை உயிர்களை, மனித உயிர்களைக் காக்கக்கூடிய மருந்துகளாகவே அந்த மரங்களெல்லாம் பயன்பட்டு வருகின்றன. ஆனால், அவை என்னென்ன அரிய வகை மரங்கள் என்று அங்கே செல்கின்ற பக்தர்களுக்கும், பொது மக்களுக்கும் சரியாகத் தெரிவதில்லை; ஆகையினால், அவை என்னென்ன மரம் என்பதை அறியும் வகையில், வனத் துறை மூலமாக ஒவ்வொரு மரத்திலும், அது என்ன வகை மரம் என்பதைக்

2016 ஜனவரி 21]

குறிப்பிட்டு பெயர்ப் பலகைகளை வைக்க முடியுமா என்று கேட்க விரும்புகிறேன். தமிழ்நாட்டு மக்களைக் காத்துக்கொண்டிருக்கின்றவர் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) யானைகளுக்குகூட முகாம்கள் நடத்தி, விலங்குகளைக் காத்து வருகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆட்சியில், மக்கள் தெரிந்துகொள்வதற்கு, வனத் துறை மூலமாக அந்த மரங்களினுடைய பெயர்களைப் பதிவேற்றச் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அழகர்கோவில் பகுதியிலுள்ள வனங்களின் மொத்தப் பரப்பு 6,811 ஹெக்டேர் ஆகும். இவ்வனப் பகுதி 1883 ஆம் ஆண்டில் காப்புக் காடாக அறிவிக்கப்பட்டு, நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. அழகர்கோவில் வனப் பகுதியில் அயனி பலா, மகாகனி, வேங்கை, கோதட்டி, கடுக்காய் போன்ற அரிய வகை மரங்கள் நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. மேலும், நெல்லி, சித்தரத்தை, பிரண்டை, குன்றிமணி, ஆடாதொடா போன்ற மருத்துவ தாவரங்கள் 250 ஹெக்டேர் பரப்பில் அப்பகுதியிலே பயிர் செய்யப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.*

முற்பகல் 11—20

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மரங்களில் வனத் துறை மூலமாக என்னென்ன அரிய வகை மரங்கள் அவை என்று பெயர் பலகை இட்டு பராமரிப்பதற்குரிய நடவடிக்கை மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவானப் பார்வைக்கு எடுத்துச் சென்று எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.*